# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
## (திருத்தம்)

***2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*வர்த்தக அமைச்சர் அவர்களால் 2021, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, ஓகத்து மாதம் 19 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

**[ 69 ஆம் சட்டமூலம் ]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2:** இவ்வாசகமானது, 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுவதன் மூலம் 60 ஆம் பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவின் கீழ் புரியப்பட்ட தவறுகள் தொடர்பில் புதியவொரு தண்டத்தை அறிமுகப்படுத்துவதாகும்.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தம்)

ச. வ.- ஓ. 46/2021

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப்பெயர்

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2**. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"(4அ) இருபதாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது அத்தகைய கட்டளைக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல்-

(அ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிராதவிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஒரு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப் பணம்,

மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் மற்றும் அடுத்துப்பின்னரான தவறொன்றின் விடயத்தில் இரண்டு இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆள் ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கும் அடுத்துப் பின்னரான தவறொன்றின் விடயத்தில் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாததும் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாதது மான குற்றப்பணமொன்றுக்கும்,

ஆளாதலும் வேண்டும்.''.

(2) அதன் (5) ஆம் உட்பிரிவில், ''இப்பிரிவின் (1), (2), (3) அத்துடன் (4) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''இப்பிரிவின் (1), (2), (3), (4) அத்துடன் (4அ) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் தவிர்ந்த'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் புரியப்பட்ட தவறுகள் தொடர்பில் சட்டம் ஏற்புடையதாகாது

3. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவின் (4அ) என்னும் உட்பிரிவின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறு இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு முன்னர் புரியப்பட்டவிடத்து, அத்தகைய தவறு தொடர்பில் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாதென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

*4*. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*